# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/45 - 2023 ජූලි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.07.13

*2340/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட பண்ட அறவீட்டுச் சட்டம்**

பிரிவு 2 இன் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதிய 2332/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம், பிரிவு 2 இன் கீழ் சோளத்தை (எச். எஸ். குறியீடு 1005.90.00) இறக்குமதி செய்வதில் விதிக்கப்பட்ட விசேட பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை இரத்துச் செய்வதுடன், ஸ்ரீலங்கா த்ரிபோஷா லிமிட்டெட் மூலம் “திரிபோஷா” தயாரிக்கும் நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்படும் சோளம் (எச். எஸ். குறியீடு 1005.90.00) மீது விதிக்கப்பட்ட விசேட பண்ட அறவீட்டின் தள்ளுபடி குறித்த கட்டளையில் எஞ்சியவைகளுக்கு எந்த மாற்றமும் இல்லாமல் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டளை ஒன்றினை இத்தால் ஆக்குகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, யூலை 13.

EOG 07-0127